# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590


<u>ஆணை நாள் 03.06.2026</u>

<u>முன்னிலை</u>

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 9424/B/2023</u>**

முனைவர்.ச.மணிமாறன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்,
தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும்
விளையாட்டு பல்கலைகழகம்,
மேலகோட்டையூர்,
சென்னை - 600 127. — பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

இவ்வாணையத்தால் இன்று (03.06.2026) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் முனைவர்.ச.மணிமாறன் அவர்கள் ஆஜராகவில்லை. மனுதாரருக்கு இவ்வாணையத்திலிருந்து அனுப்பப்பட்ட விசாரணை அழைப்பாண 'No such person' என அஞ்சல் துறையினரால் குறிப்பிடப்பட்டு ஆணையத்திற்கே திரும்பவரப்பெற்றுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, Dr.Vரமேஷ் குமார், Associate Professor, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைகழகம், மேலகோட்டையூர், சென்னை அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர் 23.05.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (03.06.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 09.02.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைகழகத்தில் PG Diploma in Yoga தொலைதூர கல்வியில் 2015ஆம் ஆண்டு சேர்ந்து, 2020-2021ஆம் ஆண்டு எழுதிய தேர்வு தொடாபாக 7 இனங்களில் தகவல்கள் வழங்கக்கோரி தாக்கல் செய்த மனு மற்றும் 16.03.2023 அன்று சட்டப்பிரிவ 19(1)ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் ஆனதாகும்.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் 04.09.2023 மற்றும் 19.09.2023 ஆகிய தேதியிடப்பட்ட கடிதங்கள் வாயிலாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

ஆவணங்கள் பரிசிலனை செய்யப்பட்டதில் மனுதாரர் கோரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் பதிவு செய்கின்றது. மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகி அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து அவரது கருத்தினை தெரிவிக்கத் தவறியுள்ளார்.

4. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில், ஆவணங்களின் அடிப்படையில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் பதிவு செய்து, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகின்றது.

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**
**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 9424/B/2023**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்,
தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும்
விளையாட்டு பல்கலைகழகம்,
மேலகோட்டையூர்,
சென்னை - 600 127.

முனைவர்.ச.மணிமாறன்,
259, MGR தெரு,
ராஜாஜி நகர்,
பெருமாட்டுநல்லூர்,
கூடுவாஞ்சேரி,
செங்கல்பட்டு மாவட்டம் - 603 202.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

Copy to: File
Sj/Ps- 12/06/2026